நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2021

தரம்: உயர்நிலைப் பிரிவு (ஆண்டு 11, 12)
Level : Advanced (Year 11 & 12)

பகுதி 2 - 5
Part – 2 - 5

வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள்
Time Given : 120 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**
**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை - 2021 உயர்நிலைப் பிரிவு (ஆண்டு 11, 12) பகுதி 2 - 5

### பகுதி 2

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(புள்ளிகள் 10)

### கீழடி அகழாய்வு ஆதாரங்கள்

இந்தியாவில் மதுரை நகரத்திற்குத் தென்கிழக்கில் சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்திருக்கும் கீழடிக் கிராமத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த பொருட்களை ஆராய்ந்ததில் தமிழச் சங்ககாலம் என்பது மேலும் 300 ஆண்டுகள் பழமையானது எனத் தெரியவந்திருப்பதாகத் தமிழகத் தொல்லியல்த்துறை தெரிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டில் மத்திய தொல்லியல்த்துறை நடத்திய அகழ்வாய்வில் அங்கு, 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கொடுமணல், அழகன்குளம் ஆகிய இடங்களில் கிடைத்த எழுத்தின் மாதிரிகளை வைத்து தமிழ்ப் பிராமி எழுத்தின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகக் கருதப்பட்டது. ஆனால், தற்போது கீழடியில் கிடைத்த ஆய்வு முடிவுகளின்படி, தமிழ்ப் பிராமி கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே 2600 ஆண்டுகளுக்கு முன்பாக கீழடியில் வாழ்ந்தவர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தார்கள், எழுதத் தெரிந்திருந்தார்கள் என்ற முடிவுக்குத் தொல்லியல்த்துறை வந்துள்ளது.

கீழடியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் பணிகளில் இருந்து கி.மு 6ஆம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்த பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய பழங்காலப் பொருட்கள் கிடைக்கப்பெற்றன. கீழடி குறித்த தொடர் செய்திகள் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

கீழடியில் கிடைத்த 6 பொருட்கள் ஆக்சலரேட்டட் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (Accelerated mass spectrometry) ஆய்வுக்காக அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் உள்ள பீட்டா அனலிடிகல் லேப்பிற்கு (Peta analytical lab) அனுப்பப்பட்டன. அதில் கிடைத்த முடிவுகளின்படி, அந்தப் பொருட்கள், கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கீழடியில் 353 செ.மீ. ஆழத்தில் கிடைத்த பொருள் கி.மு. 580வது ஆண்டையும் 200 செ.மீ. ஆழத்தில் கிடைத்த பொருள் கி.மு. 205ஆவது ஆண்டையும் சேர்ந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரு மட்டங்களுக்குக் கீழேயும் மேலேயும் பொருட்கள் இருப்பதால், கீழடியின் காலகட்டம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.மு. முதலாம் நூற்றாண்டு வரையிலானது எனத் தொல்லியல்த்துறை முடிவுக்கு வந்துள்ளது.

கீழடியில் பெண்கள் பயன்படுத்திய தங்கத்தாலான ஏழு ஆபரணத் துண்டுகள் கிடைத்துள்ளன. பல்வேறு மதிப்புமிக்க கற்களால் ஆன வளையல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சென்னை வை.எம்.சி.ஏ(YMCA) மைதானத்தில் கீழடியின் அகழ்வாராய்ச்சிப் பணியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் குழாய், கறுப்பு சிவப்புக் குவளைகள், நீர் மேலாண்மைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் மாதிரிகளைத் தமிழகத் தொல்பொருள்துறை காட்சிப்படுத்தி உள்ளனர். அத்தோடு இல்லாமல், கீழடி வரலாறு குறித்து விளக்கும் வகையில்" கீழடி-ஈரடி தமிழ்த் தொன்மங்கள் "என்ற தலைப்பில் தொல்பொருள் ஒளிப்படக் காட்சிக் கூடத்தையும் அமைத்து உள்ளனர்.

மேலும், கீழடியில் அகழாய்வு முடிவுகள் குறித்த ஆய்வறிக்கையைத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி, மலையாளம், இத்தாலிய மொழி, போர்த்துக்கீச மொழி, மண்டரின் (சீன மொழி), ஜப்பானிய மொழி , உருது, பிரெஞ்சு மொழி உள்ளிட்ட 24 மொழிகளில் புத்தகமாகத் தமிழகத் தொல்லியல்த்துறை வெளியிட்டு இருக்கிறது.

01. கீழடி எங்கே இருக்கிறது? (புள்ளி 1 )

02. கீழடித் தொல்லியல் ஆராய்ச்சியில் இருந்து நீர் அறிந்து கொண்டது என்ன? (புள்ளிகள் 3 )

03. கீழடித் தொல்லியல் பணிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற பொருட்கள் எவை? (புள்ளிகள் 3 )

04. கீழடி வரலாறு குறித்து ஒழுங்கு செய்யப்பட்ட ஒளிப்படக் காட்சியின் பெயர் என்ன? (புள்ளி 1 )

05. கீழடியில் அகழாய்வு முடிவுகள் குறித்த ஆய்வறிக்கையை தமிழகத் தொல்லியல்த்துறை என்ன செய்துள்ளது? (புள்ளிகள் 2)

## பகுதி 3

**பின்வரும் 6 – 10 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்க.**

(புள்ளிகள் 5)

அருகலை, காயலை, அளாவி, ஊடலை, மின்னூக்கி

06. Wechat

07 . Bluetooth:

08. Wi-Fi:

09. Charger:

10. Skype:

**11 – 15 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட சொற்கூட்டத்திற்குப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து எழுதுக.**

(புள்ளிகள் 5)

வெகுசன தொடர்புச்சாதனங்கள், பரிணாமம், ஐம்புலன்கள், பாம்பு, இலக்கியங்கள்

11. சர்ப்பம், அரவம், பணி

12. வளர்ச்சி, விருத்தி, கூர்ப்பு

13. சிறுகதை, நாவல், குறுநாவல்

14. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

15. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை

## 16 – 20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்றொடரைத் தெரிவு செய்து வாக்கியத்தை நிறைவு செய்க.

(புள்ளிகள் 5)

16. அந்த விபத்து நடந்தமைக்கு வீதியின் சீர்கேடும்

________________________________________

(அ) பிரதான காரணமாய் அமைந்தது (இ) முதன்மைக் காரணமாய் அமைந்தது
(ஆ) ஒரு காரணமாய் அமைந்தது (ஈ) தனிக்காரணமாய் அமைந்தது

17. அரசன் எவ்வழி செல்கின்றானோ குடிகளும்

________________________________________

(அ) அங்ஙனமே செல்வர் (இ) எவ்வழியே செல்வர்
(ஆ) அவ்வழியே செல்வர் (ஈ) அவ்வண்ணமே செல்வர்

18. அந்த மரத்தின் ஒவ்வொரு

________________________________________

(அ) பழமும் நல்லது (இ) பழமும் நல்லவை
(ஆ) பழங்களும் நல்லவை (ஈ) பழங்களும் நல்லது

19. நீர் இங்கே இருந்தீரென நான் அறிந்திருந்தால்

________________________________________

(அ) உடனே வருகிறேன் (இ) உடனே வந்திருப்பேன்
(ஆ) உடனே வந்திருந்தேன் (ஈ) உடனே வருவேன்

20. ஒரு காலத்தில் நம் நாடு நெல் உற்பத்தியில்

________________________________________

(அ) தன்னிறைவு பெறும் (இ) தெளிவு கொள்ளும்
(ஆ) முழுமை பெற்றது (ஈ) செழிப்பு உண்டாக்கும

## 21 – 26 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(புள்ளிகள் 6)

21. வீணாகிப்போதலை குறிப்பதற்கு பொருத்தமான உவமைத்தொடர்

(அ) கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்டது போல (இ) பூரணை நிலவு போல
(ஆ) விழலுக்கு இறைத்த நீர் போல (ஈ) மழைமுகம் காணாப்பயிர் போல

22. ”மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்” - இதில் கந்தம் என்பது

(அ) கந்தகம் (இ) வாசனை
(ஆ) காந்தம் (ஈ) இதழ்

23. ”உண்ணாச்சொத்து மண்ணாய்ப்போகும்” என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது

(அ) சேமிப்பின் சிறப்பு (இ) உலோபித்தனத்தின் விளைவு
(ஆ) தருமத்தின் அத்தியாவசியம் (ஈ) சுயநலப்பண்பின் மேன்மை

24. “வீதியில் எலும்பும் தோலுமாக நின்ற நாயை கண்டதும் பாலன் இரங்கினான்” – இங்கு எலும்பும் தோலும் என்பது

(அ) இரட்டைக்கிளவி (இ) அடுக்குமொழி
(ஆ) இணைமொழி (ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

25. கொரோனா நோய் காரணமாக நாளைமுதல் வெளிநாட்டிலிருந்து வரும் ஒவ்வொரு பயணியும்

(அ) சோதிக்கப்பட்டார்கள் (இ) சோதிக்கப்படுகிறார்கள்

(ஆ) சோதிக்கப்படுவார்கள் (ஈ) சோதிக்கப்பட்டுள்ளார்கள

26. ஒருவருடைய வருகைக்காக ஆவலுடன் காத்திருத்தல் என்ற பொருள் தரும் அருஞ்சொற்றொடர்

(அ) ஊணுறக்கமின்றி (இ) வழிமேல்விழிவைத்து

(ஆ) குறுகுறு நடந்து (ஈ) உணர்வு அழிந்து

## பின்வரும் 27 – 30 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமானவரைத் தெரிவு செய்க.

(புள்ளிகள் 4)

**கண்ணதாசன், இளங்கோ அடிகள், திருவள்ளுவர், பாரதிதாசன்**

27. துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா என்ற பாடலை எழுதியவர்:

______________________________

28. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும் என்று பாடியவர்:

______________________________

29. அர்த்தமுள்ள இந்துமதம் எழுதியவர்:

______________________________

30. “இடை தெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின் நடை தெரிந்த நன்மையவர்” என்று கூறியவர்:

______________________________

## பகுதி 4

## பின்வரும் 31 -35 வினாக்களுக்கு உரைநடைப் பகுதியை வாசித்து விடை எழுதுக.

நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முக மலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்றே இக்காலத்தவர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன் பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். ‘விருந்தே புதுமை’ என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

அற உணர்வையும் தமிழர் மரபையும் வலியுறுத்த திருவள்ளுவர் விருந்தோம்பல் என்கின்ற ஓர் அதிகாரத்தையே படைத்து உள்ளார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார் அவர். முகம் வேறுபடாமல் முக மலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

31. உறவினர், விருந்தினர் வேறுபாடு என்ன என்று விளக்கப்பட்டுள்ளது? (புள்ளிகள் 2)

______________________________

32. விருந்தோம்பல் என்றால் என்ன? (புள்ளி 1)

______________________________

33. விருந்து குறித்துத் தொல்காப்பியர் என்ன கூறியுள்ளார்? (புள்ளி 1)

______________________________________________________________

34. திருவள்ளுவர் விருந்தோம்பலை எவ்வாறு வலியுறுத்துகிறார்? (புள்ளிகள் 2)

______________________________________________________________

35. இல்லறம் என்பது எதற்காக என்கிறார் திருவள்ளுவர்? (புள்ளி 1)

______________________________________________________________

## 36 – 40 வினாக்களுக்கு பின்வரும் கவிதையை வாசித்து விடை எழுதுக.

### கவிதை

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும் - ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும் - வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும் - பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும் - நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

36. இக்கவிதையில் கவிஞர் கூற முற்படும் தலையாய கருத்து என்ன? (புள்ளி 1)

______________________________________________________________

37. கவிதையில் கவிஞர் விவரிக்கும் சுவைகளில் 4 கூறுக? (புள்ளிகள் 4)

______________________________________________________________

38. பாடலில் கவிஞர் விவரிக்கும் ஒலிகளில் 4 கூறுக? (புள்ளிகள் 4)

______________________________________________________________

39. தமிழும் - நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்! என்ற வரி விளக்குவது என்ன? (புள்ளிகள் 2)

______________________________________________________________

40. தமிழை விட்டு என்னால் பிரியமுடியாது என்று ஏன் கவிஞர் கூறுகிறார்? (புள்ளிகள் 2)

______________________________________________________________

## பகுதி 5

**பின்வருவனவற்றில் ஒன்றை தெரிந்து 250 சொற்களில் கட்டுரை எழுதுக.**

(புள்ளிகள் 20)

01. "மூத்தோர் சொல் அமிர்தம்" என்பது ஆன்றோர் கூற்று. இக்கூற்றினை இன்றைய நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி "முன்னோர் சொற்படி வாழ்ந்து பாருங்கள்" என்ற தலைப்பில் உள்ளூர் சஞ்சிகை ஒன்றுக்கு, தெறிப்பு எழுத்தாக்கம் ஒன்று எழுதுக.

02. ஆக்கத்திறன் கல்வி பற்றி உமக்கும் உமது நண்பருக்கும் இடையேயுள்ள அபிப்பிராயங்களை மையப்படுத்தி உங்கள் இருவருக்கும் இடையே நடைபெறும் உரையாடல் ஒன்றை எழுதுக.

03. "இன்றைய கண்டுபிடிப்புகளில் தலைசிறந்தது இணையம்" என்று பலர் கருதுகின்றனர். இக் கூற்று பற்றிய உமது கருத்துக்களை மதிப்பீடு செய்து "இன்றைய இளைஞர்களும் இணையமும் என்னும் தலைப்பில் உமது பாடசாலை உயர்வகுப்பு மாணவர்களுக்கு நீர் ஆற்ற இருக்கும் உரை ஒன்றை தயாரிக்க.

**நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**

**NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.**

**கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த**
**தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை**

**DR VENTHANAR ILANGO MEMORIAL**
**TAMIL PROFICIENCY EXAMINATION**

**2021**

Email:info@nswfts.org.au
www.nswfts.org.au